மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 02 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.03/2021
அ.வ.எண்.64/2021

1. நல்லதம்பி
2. கண்ணன்
3. பாஸ்கர்
4. ராமலிங்கம்
5. அர்ஜுன் விஜய் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. சரவணன் (இறந்துவிட்டார்)
2. கலாமணி
3. காயத்ரி
4. மைனர் இளவரசி
(சார்பாக அவரது தாயாரான 2 ம் பிரதிவாதி
காப்பாளராக உள்ளார்) ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 13.10.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.சக்திவேல் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்தவராகவும், 2 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சிவராமன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க உத்தரவிட கோரி மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவாகும்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

(i) மனுதாரர்கள்/வாதிகள் விளம்புகை மற்றும் சுவாதீனப் பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் மற்ற பிரதிவாதிகளுக்கு எதிராக

வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்து ஆதியில் நல்லுகவுண்டருக்கு பாத்தியப்பட்டது. நல்லுகவுண்டருக்கும், அவரது முதல் மனைவி செங்கம்மாளுக்கும் செம்மண்ணகவுண்டர் மற்றும் துரைசாமி ஆகியோர் வாரிசுகளாவர். அதேபோல் நல்லுகவுண்டருக்கும், அவரது 2 வது மனைவி தங்கம்மாளுக்கும் மாரிமுத்து வாரிசு ஆவார்.

(ii) நல்லுகவுண்டர் இறப்பிற்கு பின்னிட்டு அவரது 3 மகன்களான செம்மண்ண கவுண்டர், துரைசாமி மற்றும் மாரிமுத்து ஆகியோர் பாகப்பிரிவினை செய்து கொண்டு தாவா சொத்துகளை அனுபவித்து வந்தனர். பாகப்பிரிவினைபடி செம்மண்ண கவுண்டருக்கு தாவா சொத்தின் கிழபுறத்தில் ச.எண்கள்.147, 148, 151, 107 ல் 15 ஏக்கர் நிலமும், துரைசாமிக்கு மேற்கு புறத்தில் ச.எண்கள்.102, 147, 107 ல் 12 ஏக்கர் நிலமும், மாரிமுத்துவுக்கு ச.எண்கள்.147, 148, 102 ல் உள்ள 12 ஏக்கர் நிலமும் பாத்தியப்பட்டது.

(iii) செம்மண்ண கவுண்டர் தனக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்துகளையும், பிதுராஜ்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்துகளையும் தன் மகன்களான 1 ம் வாதி நல்லதம்பி, ஜெயராமன் மற்றும் 4 ம் வாதி ராமலிங்கம் ஆகியோருடன் 17.02.2009 ம் தேதியில் பாகப்பிரிவினை செய்து கொண்டார். மேற்படி பாகப்பிரிவினையின் அடிப்படையில் 4 ம் வாதி அவரது மகனான 5 ம்வாதிக்கு 30.12.2019 ம் தேதியில் சர்வே எண்கள்.148 மற்றும் 151 ல் உள்ள சொத்துகள் குறித்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார். வாதிகள் சொத்தை அடைவதற்கும், ஊர் மாரியம்மன் கோவிலுக்கு செல்வதற்கும் ஒரே வழி ச.எண்.102/2A1 ல் உள்ள கிழக்கிலிருந்து மேற்காக செல்லும் வழித்தடமாகும்.

(iv) மேற்படி வழித்தடம் ஊர் மாரியம்மன் கோவிலிலிருந்து மேற்காக சென்று கிராம நத்தம் நிலத்தை கடந்து மேற்கிலிருந்து தெற்காக செல்லும் பென்னகரம் பிரதான சாலையை அடைகிறது. மேற்படி வழித்தடத்தின் வடக்கு புறத்தில் சுமார் 80 பனைமரங்கள் அனைவருக்கும் பொதுவாக நடப்பட்டுள்ளது. நல்லுகவுண்டரின் மகன் துரைசாமி என்பவரது மகன் சரவணன் 1 ம் பிரதிவாதி ஆவார். 1 ம்பிரதிவாதியின் மனைவி 2 ம் பிரதிவாதி ஆவார். 1, 2 பிரதிவாதிகளின் வாரிசுகள் 3, 4 பிரதிவாதிகள் ஆவர்.

(v) கடந்த 23.03.2021ம் தேதி 1 முதல் 5 பிரதிவாதிகள் மேற்படி வழித்தடம் தங்கள் நிலத்தில் தான் அமைந்துள்ளது என்றும், அதில் வாதிகள் பயன்படுத்துவதற்கு உரிமையில்லை என்றும் கூறி வாதிகள் செல்வதை தடுத்தனர். இதுகுறித்து வாதிகள் மேச்சேரி காவல்நிலையத்தில் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லாததால் விளம்புகை மற்றும் சுவாதீனப் பரிகாரங்கள் கோரி வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வழக்கில் நீதிமன்ற ஆணையாளர் ஒருவரை நியமனம் செய்து தாவா சொத்துகளை தல ஆய்வு செய்து தாவா சொத்தின் பௌதீக தன்மைகள் குறித்து ஆய்வு செய்து, வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க உத்தரவிட கோரி மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

<u>2) 2ம்எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 3ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–</u>

<u>(இவ்வழக்கின் பதிலுரை குறிப்பாணையின் பேரில் இம்மனுவின் எதிருரையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது)</u>

(i) மனுதாரரின் மனு பொய். சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. நல்லுகவுண்டர் இறப்பிற்கு பின்னிட்டு அவரது 3 மகன்களான செம்மண்ண கவுண்டர், துரைசாமி மற்றும் மாரிமுத்து ஆகியோர் பாகப்பிரிவினை செய்து கொண்டு தாவா சொத்துகளை அனுபவித்து வந்தனர் என்பதும், பாகப்பிரிவினையின்படி செம்மண்ண கவுண்டருக்கு தாவா சொத்தின் கிழபுறத்தில் ச.எண்கள்.147, 148, 151, 107 ல் 15 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது என்பதும் பொய்யானதாகும். ஆனால் துரைசாமிக்கு ச.எண்கள்.102, 147, 107 ல் 12 ஏக்கர் நிலமும், மாரிமுத்துவுக்கு ச.எண்கள்.147, 148, 102 ல் உள்ள 12 ஏக்கர் நிலமும் ஒதுக்கப்பட்டது என்பது உண்மையாகும்.

(ii) பாகப்பிரிவினையின் அடிப்படையில் 4ம் வாதி அவரது மகனான 5ம்வாதிக்கு 30.12.2019ம் தேதியில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்பதும், வாதிகள் சொத்தை அடைவதற்கும், ஊர் மாரியம்மன் கோவிலுக்கு செல்வதற்கும் ச.எண்.102/2A1 உள்ள ஒரே வழித்தடம் என்பதும், கடந்த 23.03.2021ம் தேதி 1 முதல் 5

பிரதிவாதிகள் மேற்படி வழித்தடம் தங்கள் நிலத்தில் தான் அமைந்துள்ளது என்றும் கூறி வாதிகள் செல்வதை தடுத்தனர் என்பதும் பொய்யானதாகும்.

(iii) தாவா சொத்து மற்றும் இதர சொத்துகளிலுள்ள 40 ஏக்கர் நிலமானது பூர்வீகமாக நல்லுகவுண்டருக்கு பாத்தியப்பட்டு, அதில் அவரது வாரிசுகளான செம்மண்ண கவுண்டருக்கு ச.எண்கள்.147, 148, 151, 107 ல் 15 ஏக்கரும், துரைசாமிக்கு ச.எண்கள்.102, 147, 107 ல் 12 ஏக்கரும், மாரிமுத்துவுக்கு ச.எண்கள்.147, 148, 102 ல் 12 ஏக்கரும் பாகமாக ஒதுக்கப்பட்டு, அவரவர்களுக்கு பிரிந்த பாகத்தை அவரவர்கள் அனுபவித்து வந்தனர்.

(iv) 1ம் எதிர்மனுதாரரின் தந்தை சென்றாயன் கடந்த 01.10.2012ம் தேதியில் 3, 4 எதிர்மனுதாரர்களின் பேரில் தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்து, 3, 4 எதிர்மனுதாரர்களின் கார்டியனாக அவரது மனைவி செல்லம் என்பவரை நியமித்தார். கடந்த 28.09.2017 ல் 1ம் எதிர்மனுதாரரின் தாயாரான செல்லமும், கடந்த 14.11.2019 ல் 1ம் எதிர்மனுதாரரின் தந்தையான சென்றாயனும், கடந்த 11.06.2021 ல் 1ம்பிரதிவாதியும் இறந்ததற்கு பின்னிட்டு 2 முதல் 4 பிரதிவாதிகள் தாவா சொத்தை அனுபவித்து வருகின்றனர். தாவா சொத்துவிவரமும், ஆவணங்களும் போர்ஜரியாக மனுதாரர்களால் உருவாக்கப்பட்டவையாகும். மனுதாரர்கள் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 2, 3ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனு விசாரணையின் போது மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை.

<u>4) பிரச்சினை :–</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்ற ஆணையாளர் ஒருவரை நியமனம் செய்து தாவா சொத்துகளை தல ஆய்வு செய்து தாவா சொத்தின் பௌதீக தன்மைகள் குறித்து ஆய்வு செய்து, வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட கோரி மனுதாரர்கள் மனுதாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 2 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்துவிவரமும், ஆவணங்களும் போர்ஜரியாக மனுதாரர்களால் உருவாக்கப்பட்டவையாகும் எனவும், மனுதாரர்கள் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 2 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) இருதரப்பு வாதங்களையும் கவனமாக பரிசீலனை செய்ததில் மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களின் சொத்தை அடைவதற்கும், ஊர் மாரியம்மன் கோவிலுக்கு செல்வதற்கும் ச.எண்.102/2A1ல் உள்ள கிழக்கிலிருந்து மேற்காக செல்லும் வழித்தடம் தான் ஒரே வழியாகும் எனவும், வேறு வழித்தடம் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழித்தடமானது ஊர் மாரியம்மன் கோவிலிலிருந்து மேற்காக சென்று கிராம நத்தம் நிலத்தை கடந்து மேற்கிலிருந்து தெற்காக செல்லும் பென்னகரம் பிரதான சாலையை அடைகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே போல் மேற்படி வழித்தடத்தின் வடக்கு புறத்தில் சுமார் 80 பனைமரங்கள் அனைவருக்கும் பொதுவாக நடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iv) அதனால் மனுதாரர்கள் நீதிமன்ற ஆணையாளர் ஒருவரை நியமனம் செய்து தாவா சொத்தை தல ஆய்வு செய்து தாவா சொத்தின் பௌதீக தன்மைகள் குறித்து ஆய்வு செய்து, வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்யும்பட்சத்தில் ச.எண்.102/2A1ன் வழியாக தாவா வழித்தடம் செல்வதையும், அதன் அமைப்பையும், மேற்படி வழித்தடத்திற்கு வடக்குபுறத்தில் நடப்பட்டுள்ள பனைமரங்களின் அமைப்பு குறித்தும் இந்நீதிமன்றத்திற்கு அவற்றின் உண்மை தன்மை தெரியவரும் என தெரிவித்துள்ளனர்.

(v) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என கட்சி செய்துள்ளது தெரியவருகிறது. எனவே தாவா வழித்தடம் எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்பது குறித்தும், மேற்படி தாவா வழித்தடமானது எந்த சர்வே எண்ணில் தொடங்கி எந்த சர்வே எண்ணில் முடிவடைகிறது என்பது குறித்தும், மேற்படி தாவா வழித்தடத்தின் பௌதீக தன்மைகள் குறித்தும், மேற்படி தாவா வழித்தடத்தை சுற்றி அமைந்துள்ள மரங்கள் குறித்தும், தற்போது நடைமுறையில் மேற்படி தாவா வழித்தடம் எந்த அளவில் அமைந்துள்ளது என்பது குறித்தும், மேற்படி தாவா வழித்தடத்தை பயன்படுத்த இயலாத வண்ணம் ஏதேனும் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளதா? என்பது குறித்தும் நீதிமன்ற ஆணையாளர் தாக்கல் செய்யும் அறிக்கையானது இவ்வழக்கினை தீர்மானிக்க உதவும் என்பதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக திரு.எம்.இளங்கோவன் வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்படுகிறார். கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர், தாவா சொத்தை பார்வையிட்டு அதனை தல ஆய்வு செய்து, தாவா சொத்தின் பௌதீக தன்மைகள் குறித்து ஆய்வு செய்து, தாவா வழித்தடம் எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்பது குறித்தும், மேற்படி தாவா வழித்தடமானது எந்த சர்வே எண்ணில் தொடங்கி எந்த சர்வே எண்ணில் முடிவடைகிறது என்பது குறித்தும், மேற்படி தாவா வழித்தடத்தை சுற்றி அமைந்துள்ள மரங்கள் குறித்தும், தற்போது நடைமுறையில் மேற்படி தாவா வழித்தடம் எந்த அளவில் அமைந்துள்ளது என நில அளவையரை கொண்டு அளந்தும், அதன் அளவுகள் குறித்தும், மேற்படி தாவா வழித்தடத்தை பயன்படுத்த இயலாத வண்ணம் ஏதேனும் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளதா? என்பது குறித்தும், அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணம் ரூ.5000/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணத்தை மனுதாரர்கள் நேரடியாக செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு வழங்கியதற்கு பின்னிட்டு வழக்கு சொத்துகளை பார்வையிட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அழைக்க.02.12.2022.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 02 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2022.11.02 16:24:14 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:—</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:—</u> இல்லை

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2022.11.02 16:24:22 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.